மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த 'பார்மல் எடுகேஷன் அண்டு பங்ஷனல் லிட்டரசி' அந்த இடங்களில் பரிட்சார்த்தமாக இப்போது நடத்தி வருகிறோம். அது வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதை அறிந்தபிறகு, பிற மாவட்டங்களுக்கும் அதை விஸ்தரிக்கும் திட்டத்தை அரசு பரிசீலிக்கும்.

அரசியல் தியாகிகளின் குழந்தைகள்

***431. வினா—திரு. என். மருதாசலம்** : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு சைனிக் ஸ்கூலில் சேர்ந்து படிக்க உதவித் தொகை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே. இந்த சைனிக் ஸ்கூலில் தியாகிகளின் குழந்தைகளைச் சேர்த்துக்கொள்ள ஏதேனும் சலுகைகள் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த சைனிக் பள்ளியில் எந்தவிதமான சலுகையும் யாருக்கும் தருவது இல்லை. மெரிட் பேசிஸ்ஸில்தான் எடுக்கிறார்கள். ஜாதி, மதம், இனம் முதலிய பாகுபாடுகள் எதைப்பற்றியும் கவலைப் படாமல், மாணவர்களுக்கு இருக்கும் ஆப்டிட்யூட், நோக்கம் ஆகியவற்றை பொறுத்து, தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அவர்களுடைய குடும்பங்களின் வருமான அடிப்படையில் வருஷ வருமானத்தை கணக்கிட்டு, அதற்கேற்ற அளவுக்கு சிலபேர்களுக்கு உதவித்தொகை அளிக்க முயற்சி இருந்து வருகிறது. வேறு எந்த வகையிலும் யாருக்கும் சலுகை அளிக்கப்படவில்லை.

திரு. என். மருதாசலம் : இப்போது இருக்கும் சைனிக் ஸ்கூல் ஒரே ஒரு மாவட்டத்தில் தான் இருக்கிறது. அப்படி இல்லாது எல்லா மாவட்டத்திலும் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

1972 மார்ச் 11]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே ஒரே ஒரு இடத்திலே உடுமலைப்பேட்டைக்குப் பக்கத்திலே அமராவதி அணைக்கட்டுக்குப் பக்கத்திலே இருந்து வருகிறது. அங்கே இருக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் கிட்டத் தட்ட ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,500 அல்லது ரூ. 3,000 செலவாகிறது. இதை எல்லா இடத்திலும் ஆரம்பிக்க முடியாது. வேறு ஒரு இடத்தில் ஆரம்பிப்பதற்காக செயற் குறிப்பு இருந்து வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் இப்படி ஒரு ஸ்கூல் தான் இருந்து வருகிறது.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, சென்ற 4-5 வருடங் களுக்கு முன்பு சாத்தனூர் அணைக்கட்டிலே ஒரு சைனிக் ஸ்கூல் ஆரம்பிக்கும் திட்டம் இருந்ததே, அந்தத் திட்டம் என்ன ஆயிற்று? அதை ஆரம்பிக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திட்டம் இருந்த தாகத் தெரியவில்லை. எண்ணம் இருந்திருக்கலாம். அது பற்றிய தகவல் இல்லை. வேறு ஒரு இடத்தில் கொடைக்கானல் பகுதியில் ஆரம்பிக்கவேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. அது பற்றிய முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

திரு. கே. எ. வகாப் : இந்த சைனிக் பள்ளியில் தாழ்த்தப் பட்டவர்களுக்கும், பின்தங்கிய வகுப்பினருக்கும் தனியாக இடம் ஒதுக்கித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றித்தான் முதலிலே பதில் சொல்கிறபோது 'இல்லை' என்று சொல்லி விட்டாரே! தகுதி அடிப்படையில் சேர்க்கப்படுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். திரும்பவும் அதே கேள்வியை எதற்காகக் கேட்கிறீர்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலி லேயே சொன்னேன். அங்கே ஜாதி, மதம், இனம் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படாமல், அவர்களுக்கு இருக்கும் நோக்கத்தின் அடிப்படையில், திறமையின் அடிப்படையில் தான் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். அந்தப் பள்ளி மத்திய அரசின் உதவியோடு நடத்தப்படுகிறது.

திருமதி த. ந அனந்தநாயகி : தலைவரவர்களே, தகுதியின் அடிப்படையில் அந்தப்பள்ளியில் சேர்க்கப்படுகிறவர்களுக்கு,

வருமானத்தின் அடிப்படையில் சலுகைகள் தரப்படுகின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். தகுதியின் அடிப்படையில் வருவதற்கு தியாகிகளின் குழந்தைகளுக்கு வாய்ப்பு இருந்தால், அவர்களுக்கு அரசு உதவி செய்ய முன்வருமா? நாட்டின் உரிமைக்காக போராடியவர்களுக்கு இந்த உதவியைக்கூட செய்யக்கூடாதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சேர்க்கப்பட்ட அளவில் பார்த்தால் பிற்படுத்தப்பட்டவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அதைப்பற்றிய கணக்கு என்னிடத்தில் இல்லை. அவர்களெல்லாம் புறக்கணிக்கப்படவில்லை, மேல் வகுப்புக் காரர்கள் மட்டும் சேர்க்கப்படுகிறார்கள் என்ற நிலையில்லை. புள்ளி விவரம் தேவையென்றால், தனிக்கேள்வி போட்டால் தரலாம்.

துவக்கக் கல்வித் திட்டம்

*432 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1967-ம் கல்வி ஆண்டு முதல் நடப்புக் கல்வி ஆண்டு வரையில் துவக்கக் கல்வித் திட்டத்தில் புதிய மாற்றங்கள் ஏதேனும் செய்யப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 1965-ம் ஆண்டில் அரசினரால் ஏற்கப்பட்ட புதிய பாடத்திட்ட முறைகள் 1967-68-ம் ஆண்டு முதல் ஏழாம் வகுப்பிலும், 1968-69-ம் ஆண்டு முதல் எட்டாம் வகுப்பிலும் அமுல் செய்யப்பட்டுள்ளன. தற்கால விஞ்ஞான வளர்ச்சி, அணுகு முறை, புதிய கண்டுபிடிப்புகள், பொருளாதார வளர்ச்சி, சமூக சூழ்நிலை, நவீன வாழ்க்கை முறைகள் இவைகளுக்கேற்பப் பள்ளிக் கல்வியின் பாடத்திட்டங் களை மாற்றி அமைக்கக் கருதி, இதற்கென வல்லுநர் குழுக்களை ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் அரசு அமைத்துள்ளது. இக்குழுக்கள் தங்களது புதிய பாடத்திட்டங்களின் நகல்களை தயாரித்துள்ளன. மேலும் ஆதாரக் கல்வித் திட்டத்தை, ஆதாரக் கல்வி அல்லாத பாடத் திட்டத்துடன் ஒருங்கு இணைத்தல் பற்றியும் ஒரு துணைக்கமிட்டி ஆய்வு செய்து அதுபற்றிய பாடத்திட்ட வரைவு ஒன்றினை சமர்ப்பித்துள்ளது.